ஏரிகள் - குளங்கள் மற்றும் கண்மாய்களில்

களிமண் - வண்டல் மணலை விவசாயிகள் கட்டணமின்றி எடுத்துச் செல்லலாம்!

சட்டப்பேரவையில் அவை முன்னவர் - நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அறிவிப்பு!

சென்னை, ஜூன் 30- அவை முன்னவரும், நீர் வளத்துறை அமைச்சருமான துரைமுருகன் அவர்கள் நேற்று முன்தினம் (28.6.2024) சட்ட மன்றப் பேரவையில் ஏரிகள், குளங்கள் மற்றும் கண்மாய்களில் உள்ள களிமண் மற்றும் வண்டல் மண் ஆகியவற்றை கட்டணமின்றி விவசாயப் பெருமக்கள் மற்றும் மண்பாண்டத் தொழிலாளர்கள் எடுத்து செல்லும் முறையை எளிமையாக்குதல் குறித்து பேசியதாவது:-

விவசாயப் பெருமக்கள் மற்றும் மண்பாண்டத் தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில், நீர்வளத் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறைகளின் கட்டுப்பாட்டில் உள்ள ஏரிகள், குளங்கள் மற்றும் கண்மாய்களில் உள்ள களிமண் மற்றும் வண்டல் மண் ஆகியவற்றை கட்டணமின்றி எடுத்துச் செல்ல ஏற்கெனவே ஜூன்12 அன்று முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருந்தார்கள்.

இந்நிலையில், இதற்கு அனுமதி வழங்கும் முறையை எளிமைப்படுத்தும் வகையில், வட்டாட்சியருக்கு பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. அதோடு, சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் இப்பணியினை ஒருங்கிணைந்து திறம்பட செய்திட இயற்கை வளங்கள் துறையால் கடந்த 25.6.2024 அன்று நிலையான வழிகாட்டு நெறிமுறைகளும் அறிவிக்கப்பட்டு, இதற்கென பிரத்யேக இணையதளம் ஒன்று உருவாக்கப்பட்டு உள்ளது.

இன்று வரை நீர்வளத் துறைக் கட்டுப்பாட்டில் உள்ள 5,103 ஏரிகள், குளங்கள், கண்மாய்கள்; ஊரக வளர்ச்சித் துறை கட்டுப்பாட்டில் உள்ள 6,757 ஏரிகள், குளங்கள், கண்மாய்கள் பற்றிய விவரங்கள் மாவட்ட அரசிதழ்களில் வெளியிடப்பட்டு, தற்போது இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகின்றன.

ஏற்கெனவே விவசாயிகள் தாங்கள் வசிக்கும் கிராமங்களில் அல்லது அருகில் உள்ள கிராமங்களில் உள்ள ஏரிகள் மற்றும் குளங்களில் உள்ள மண்ணை எடுத்துக்கொள்ளலாம் என்ற நிலையை மாற்றி, தற்போது விவசாயிகள் தாங்கள் வசிக்கும் தாலுகாவில் உள்ள ஏரிகள் மற்றும் குளங்களில் வண்டல் மண் எடுத்துக் கொள்ளலாம்.

மேலும், இடைத்தரகர்கள் இல்லாமல், நேரடியாக விவசாயிகள் தாங்கள் வசிக்கும் இடத்திற்கு அருகிலுள்ள இசேவை மையத்தில் விண்ணப்பித்து, எவ்விதக் கட்டணமுமின்றி, குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் மண் எடுக்கும் உத்தரவுகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

இதன் பயனாக, ஏரிகள், குளங்கள் மற்றும் கண்மாய்கள் தூர்வாரப்படுவதால், மழைக் காலங்களில் பெறப்படும் நீர் கூடுதலாக சேமிக்கப்பட்டு, நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்து, அப்பகுதி வாழ் பொதுமக்களும் பெரிதும் பயன்பெறுவார்கள்.

எனவே, விவசாயப் பெருமக்கள் மற்றும் மண்பாண்டத் தொழிலாளர்கள் இந்த நல்வாய்ப்பினைப் பயன்படுத்தி, இணைய தளம் மூலம் வரும் 3-7-2024 முதல் விண்ணப்பித்துப் பயன்பெறுமாறு கேட்டுக் கொண்டு அமைகிறேன்.

இவ்வாறு அமைச்சர் துரைமுருகன் கூறினார்.

தேனாம்பேட்டை பாலியல் வழக்கு:

நான்கு பேர் குண்டர் சட்டத்தில் அடைப்பு!

சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தகவல்!

சென்னை, ஜூன் 30

சட்டப்பேரவையில் காவல் துறை மானியக் கோரிக்கையில் மார்க்சிஸ்ட் உறுப்பினர் சின்னதுரை பேசுகையில், சென்னை தேனாம்பேட்டை பகுதியில் ஒரு கும்பல் மூன்று ஆண்டுகளாக ஏழையெளிய பள்ளி மாணவிகளை பாலியல் வணிகத்திலே ஈடுபடுத்திய சம்பவத்தில் எத்தனை மாணவிகள் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்று தெரியவில்லை.

எனவே இச்சம்பவம் குறித்து விசாரிக்க CBCID விசாரணைக்கு உத்தரவிட்டு, விசாரித்து மூன்று மாத கால அவகாசத்திலே குற்றவாளிகள் அனைவரையும் கைது செய்திட வேண்டுமென பணிவோடு நான் கேட்டுக் கொள்கிறேன் என்று குறிப்பிட்டார்.

அப்போது முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், உறுப்பினர் சின்னதுரை அவர்கள் முன் வைத்த கோரிக்கையை பொறுத்தவரை, தேனாம்பேட்டை பாலியல் வழக்கில் அனைத்து குற்றவாளிகளும் கைது செய்யப்பட்டுள்ளார்கள். அதில் தொடர்புடைய நான்கு பேர் குண்டர் சட்டத்தில் அடைக்கப்பட்டுவிட்டார்கள். புலன் விசாரணையில் வேறு மாநிலங்களில் விசாரணை நடத்த வேண்டுமென்ற சூழ்நிலை எழுந்ததால் CBCID க்கு மாற்ற வேண்டுமென்ற உறுப்பினர் கோரிக்கை நிச்சயம் பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்தார்.

பள்ளிகளின் அடிப்படைக் கட்டமைப்புகளை மேம்படுத்த உதவிடும் எம்.எல்.ஏ.க்களுக்கு நன்றி!

ஆசிரியர் காலிப் பணியிடங்கள்: விரைவில் 2222 பட்டதாரி ஆசிரியர்கள் நியமனம்!

சட்டப் பேரவையில் - பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவிப்பு!

சென்னை, ஜூன் 30- தமிழ்நாட்டின் பள்ளிகளில் காலியாக உள்ள ஆசிரியர்கள் பணியிடங்கள் விரைவில் 2222 பட்டதாரி ஆசிரியர்களைக் கொண்டு நிரப்பப்படும் என, சட்டப் பேரவையில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவித்தார்.

சட்டப் பேரவை கேள்வி நேரத்தில் இது குறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு:-

டாக்டர் வை.முத்துராஜா: புதுக்கோட்டை நகரில் உள்ள இராணியார் மேல் நிலைப் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறை கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி: நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், கட்டடம் கட்டுகின்ற அந்தப் பணிகளுக்கென்று, பேராசியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டம் என்ற திட்டத்தின்மூலம் ரூ.7,500 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, இந்த நிதியாண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிற ஆயிரம் கோடி ரூபாயோடு சேர்த்து, இதுவரையில் ரூ.3,497 கோடி ஒதுக்கீடு செய்திருக்கிறார். இதுவரை திறக்கப்பட்டுள்ள கட்டடங்களின் விவரம், வகுப்பறைகள் 3,601, ஆய்வகங்கள் 21, கழிவறைகள் 184 units, சுற்றுச்சுவர் 700மீ. கட்டப்பட்டு வருபவை வகுப்பறைகள் 3,401, ஆய்வகங்கள் 105, கழிவறைகள் 191 unit, சுற்றுச்சுவர் 2190மீ. விடுதிகள் 10, இந்த ஆண்டு உத்தேசிக்கப்பட்டுள்ள கட்டடங்கள் விவரம், வகுப்பறைகள் 4,356, ஆய்வகங்கள் 280, கழிவறைகள் 133, சுற்றுச்சுவர் 1,100மீ. ஆக, அந்த வகையிலே நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் கேட்ட கேள்விக்கு புதுக்கோட்டை தொகுதி, புதுக்கோட்டை நகரில் உள்ள இராணியார் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் 1,628 மாணவிகள் கல்வி பயின்று வருகிறார்கள். அதில் மொத்தம் 64 ஆசிரியர்கள் பணிபுரிகின்றனர். இந்தப் பள்ளிக்கு மொத்தம் 8 வகுப்பறைகள் மற்றும் 2 கழிவறைகள் தேவைப்படுகின்றன. இந்தப் பள்ளியில் கல்வி பயில்கின்ற மாணவிகளின் எண்ணிக்கைக்கேற்ப முன்னுரிமையின் அடிப்படையில், நபார்டு திட்டத்தின்கீழ் கூடுதல் வகுப்பறைகள் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

டாக்டர் வை.முத்துராஜா: புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதி, புதுக்கோட்டை நகர்ப் பகுதியில் இயங்கிவரும் இராணியார் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்டித் தர ஆவன செய்த தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கும், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். புதுக்கோட்டை நகர்ப் பகுதியில் சந்தைப் பேட்டை அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் சுமார் 820 மாணவிகள் கல்வி பயின்று வருகின்றனர். இந்தப் பள்ளி, இந்த கல்வியாண்டில் 12 ஆம் வகுப்பில் 100 சதவிகிதம் தேர்ச்சி பெற்று முதல்வர் அவர்களிடம் விருது பெற்ற பள்ளியாகும். கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டில் இப்பள்ளியில், மாணவிகளின் சேர்க்கை விகிதம் அதிகரித்துள்ளது. மேற்கண்ட பள்ளிக்கு வகுப்பறைகள் மற்றும் ஆய்வகங்களின் வசதிகள் மிகவும் குறைவாக உள்ளன. மாணவிகளின் நலன் கருதி, கூடுதல் வகுப்பறைகள் கட்டித் தர அரசு முன்வருமா?

அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி: பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் சொன்னதுபோல இந்த ஆண்டில் பள்ளிக் கல்வித் துறையில் ஏறத்தாழ 1,728 பள்ளிக்கூடங்களில், மாணவர்களின் தேர்ச்சி விகிதம் 100க்கு 100 சதவிகிதம் High School and Higher Secondary School பெற்றிருக்கிறது. ஆக, அந்தவகையிலே இன்று சட்டமன்ற உறுப்பினர் கேட்டிருக்கின்ற அந்தக் கட்டடங்கள் இந்த ஆண்டிலே கட்டித் தரப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, பல சட்டமன்ற உறுப்பினர்களின் கேள்விகளைப் பார்த்தீர்களென்றால், சில பள்ளிகளில் benches and desks கேட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் வை. முத்துராஜா அவர்களுடைய தொகுதியில் இருக்கின்ற ஒரு பள்ளிக்கூடத்திற்கு நான் ஆய்வுக்குச் சென்றபோது, அங்கே ஒரு வகுப்பறையில் கீழே அமர்ந்திருந்த பிள்ளைகளைப் பார்த்து, உடனடியாக நம்முடைய சட்டமன்ற உறுப்பினரிடம் எடுத்துச்சொன்னேன். சொல்லி, குறுகிய காலத்தில் உடனடியாக அந்த வகுப்பறைக்குத் தேவையான அந்த benches, desks எல்லாவற்றையுமே, அவருடைய நிதியிலிருந்து அதை வழங்கியிருக்கிறார். அதற்கு இந்த நேரத்தில் அவருக்கும், இதுபோன்ற பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்ற அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் இந்த நேரத்தில் நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர் கேட்கின்ற கோரிக்கை, மிக விரைவில் இந்த ஆண்டே அது கட்டித்தரப்படும் என்பதை தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வை.முத்துராஜா: புதுக்கோட்டை நகரத்தில் இயங்கிவரும் அரசு உயர், துவக்கப்பள்ளியில் 650 க்கும் மேற்பட்ட மாணவர்கள் படித்து வருகின்றனர். இப்பள்ளிக்கு கூடுதல் ஆசிரியர்கள் மற்றும் கூடுதல் வகுப்பறைகள் கட்டித்தருமாறும், கறம்பக்குடி ஒன்றியத்திற்குட்ட பல்லவராயன் பத்தை, வளங்கொண்டான் விடுதி மற்றும் புதுக்கோட்டை ஒன்றியத்திற்குட்பட்ட வாராப்பூர், நகராட்சிப் பகுதிக்குட்ப காமராஜபுரம் ஆகிய பகுதிகளிலிலுள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும் மற்றும் கறம்பக்குடி ஒன்றியம், கரு.தெற்கு தெருநடு நிலைப்பள்ளியை உயர் நிலைப்பள்ளியாகவும் தரம் உயர்த்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி: ஏற்கெனவே பள்ளிகளைத் தரம் உயர்த்துவது பற்றி நான் நிறைய பதில் சொல்லியிருக்கிறேன். இருந்தாலும், நம்முடைய சட்டமன்ற உறுப்பினருடைய அந்த கோரிக் கைகள் எல்லாம் இன்றைக்கு நாம் கையில் வைத்துக்கொண்டிருக்கிறோம். அது, எதுஎதெல்லாம் விதிக்கு உட்பட்டு வருகிறதோ, அதையெல்லாம் கண்டிப்பாக எங்களுடைய அலுவலர்களோடு உட்கார்ந்து பேசி, அந்த கருத்துருவைப் பெற்று, எதெல்லாம் செய்ய முடியுமோ அதைச் செய்கின்ற பணிகளில் எங்களை நாங்கள் முழுமையாக ஈடுபடுத்திக்கொள்வோம்.

அதேபோன்று அவர் கேட்கின்ற கோரிக்கைகள் ஒவ்வொன்றும் படிப்படியாக இந்த ஆண்டு நிறைவேற்றுவதற்கு எல்லாவிதத்திலும் நாங்கள் வழிவகை செய்வோம். அவர் கேட்டிருக்கின்ற ஆசிரியர் பணியிடங்களைப் பொறுத்த வரைக்கும், இன்றைக்கு ஆங்காங்கே தற்காலிக ஆசிரியர்களை வைத்திருக்கிறோம் என்று சொன்னாலும், நீங்கள் ஏற்கெனவே பார்த்தீர்களென்றால், BT teachers ஆசிரியர்கள் 2222 பேர் தேர்வை முடித்துவிட்டு, certificate verification ல் இருக்கிறார்கள். இந்த மாத இறுதிக்குள் அதுவும் நிறைவு செய்யப்பட்டு, எங்கெங்கெல்லாம் காலிப் பணியிடங்கள் இருக்கின்றனவோ அவை நிரப்பப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அவையில் விவாதம் நடைபெற்றது.

கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா

பள்ளிக்குழந்தைகளுக்கு கல்வி உபகரணங்கள்!

இளைஞர் அணி துணை அமைப்பாளர் வினோத்குமார் ஏற்பாட்டில் நா.இளையராஜா வழங்கினார்!

திருவாரூர்,ஜூன்30.

தமிழ்நாடு முதல்வர் தளபதியார் அவர்களின் வழிகாட்டுதல்களின்படியும், மாநில இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனைகளின்படியும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா, மற்றும் 101 வது பிறந்தநாள் விழா திருத்துறைப்பூண்டி ஒன்றியம் கொத்தமங்கலம் ஊராட்சியில் எழுச்சியோடு நடைபெற்றது.

இந்த விழாவில் திருவாரூர் மாவட்ட திமுக இளைஞர் அணியின் சார்பில், மாவட்ட திமுக துணை அமைப்பாளர் வி.வினோத்குமார் அவர்களின் ஏற்பாட்டில் பள்ளி மாணவ மாணவிகளுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கப்பட்டது.

மாநில இளைஞரணி துணை செயலாளர் நா. இளையராஜா அவர்களின் தலைமையில் திருத்துறைப்பூண்டி ஒன்றியம் தானந்தாங்கி ஊராட்சி ஒன்றிய துவக்க பள்ளியில் நடைபெற்ற விழாவில், பள்ளியில் படிக்கும் அனைத்து மாணவ மாணவியர்களுக்கும் கல்வி உபகரணங்களை மாநில இளைஞரணி துணை செயலாளர் நா. இளையராஜா வழங்கினார்.

இந்த நிகழ்ச்சிகளில் முன்னாள் ஒன்றிய கழக பொருளாளரும், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளருமான பாஸ்கர், ஒன்றிய இளைஞரணி நிர்வாகிகள் பரமேஸ்வரா, ஸ்ரீதர், முருகானந்தம், ஒன்றிய மாணவரணி நிர்வாகி புஷ்பராஜ், முன்னாள் தகவல் நுட்ப அணி தொகுதி பொறுப்பாளர் வழக்கறிஞர் சி.எஸ்.சிவகுமார், பொன் மாணிக்கம், சேகல் இளையராஜா, உள்ளிட்ட நிர்வாகிகளும், ஆசிரிய பெருமக்களும், பெற்றோர்களும் பெருந்திரளாக பங்கேற்றனர்.

முன்னதாக கீழச்சேரி கிளைச் செயலாளர் ஜாகிர் உசேன் அனைவரையும் வரவேற்க பள்ளி தலைமை ஆசிரியர் ஆர்.கோமதி நன்றி கூறினார்.

விக்கிரவாண்டி இடைத்தேர்தல்: கழக வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து

சிறுபான்மையினர் கூட்டமைப்பின் தேர்தல் பிரச்சார ஆலோசனைக் கூட்டம்!

பீட்டர் அல்போன்ஸ் தலைமை! அமைச்சர்கள் க.பொன்முடி - செஞ்சி கே.எஸ்.மஸ்தான் சிறப்புரை! இறையன்பன் குத்தூஸ் வரவேற்புரை!

விழுப்புரம், ஜூன் 30-

விக்கிரவாண்டி சட்டமன்ற இடைத்தேர்தல் 'இந்தியா' கூட்டணியின் திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து சிறுபான்மையினர் கூட்டமைப்பின் தேர்தல் பிரச்சார ஆலோசனைக் கூட்டம் நடைபெறுகிறது.

ஜூலை 2 - செவ்வாய்க் கிழமை அன்று காலை 9.00 மணி அளவில் முண்டியம்பாக்கம் - அடையாறு ஆனந்த பவன் - ஜீவன் பார்க்கில் நடைபெறும் இம்மாபெரும் ஆலோசனைக் கூட்டத்திற்கு - தமிழ்நாடு சிறுபான்மையினர் நல ஆணையத்தின் தலைவர் சா.பீட்டர் அல்போன்ஸ் தலைமை வகிக்கிறார்.

விஜிலா சத்யானந்த் முன்னிலை வகிக்கிறார்.

கலைமாமணி இறையன்பன் குத்தூஸ் வரவேற்புரையாற்றுகிறார்.

அமைச்சர்கள் முனைவர் க.பொன்முடி, செஞ்சி கே.எஸ்.மஸ்தான், மாவட்டக் கழகப் பொறுப்பாளர் டாக்டர் பொன். கௌதம சிகாமணி, முனைவர் எஸ். ஜெகத்ரட்சகன் எம்.பி. மற்றும் தி.அ.முகமது சகி, இரா.ஜனகராஜ் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

எம்.டி.குலாம்மொய்தீன், ரெவ. ராபர்ட் வில்லியம் பால்ராஜ், ஹாஜி எம். அப்துல் சலாம், ஆர்.பி. ரமேஷ், குமார், ரங்கா பூபதி, ஜெயச்சந்திரன், நைனா முகமது, மா.இமானுவேல், மௌலானா மௌலவி, அல்ஹஜ் ஏ.சிராஜூத்தீன் அன்வாரி, அல்ஹாஜ் வி.ஆர். முஹம்மது இப்ராஹிம், அல்ஹாஜ் எஸ்.எம். அமீர் அப்பாஸ், அல்ஹாஜ் முஸ்தபா உள்ளிட்டோரும் இக்கூட்டத்தில் கலந்து கொள்கின்றனர்.

தமிழ்நாடு கிறிஸ்துவ சபைகளின் கூட்டமைப்பின் தலைவர் எஸ்.லியோ நெல்சன் நன்றி கூறுகிறார்.

விக்கிரவாண்டி தொகுதி ஒன்றிய, பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர்கள் – துணை அமைப்பாளர் ஆலோசனைக் கூட்டம் விக்கிரவாண்டி தேர்தல் பணிமனையில் மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி தலைமையில் நடைபெற்றது. மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் செ.தினகரன் வரவேற்புரைற்றினார். மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் அப்துல் மாலிக், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ராயல் அன்பு, எஸ்.பாலாஜி, ப.கலைவாணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி கலந்து கொண்டு விக்கிரவாண்டி வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவா (எ) சிவசண்முகம் பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறுவது குறித்தும் தேர்தல் பணிகள் குறித்தும் ஆலோசனைகளை வழங்கினார். மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், பேரூர் செயலாளர் நைனா முகமது, பேரூராட்சி மன்றத் தலைவர் அப்துல் சலாம், நகரச் செயலாளர் இரா.சக்கரை, விவசாய அணி பாபு ஜீவானந்தம் உள்ளிட்ட ஒன்றிய, பேரூர் இளைஞர் அணி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.